செ.வெ.எண்: 39/ஆகஸ்ட்/ 2019 நாள்:18.08.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை மூலம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு 52 பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முன்னுரிமை அடிப்படையில் 36 பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. 127.88 கி.மீ தூரத்திற்கு ரூ.322.20 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழக செயல் இயக்குநரும், பொதுப்பணித்துறை தூர்வாரும் பணி கண்காணிப்பு அலுவலர் திரு.வி.விஷ்ணு,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் ஆய்வு:**

-----------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை மூலம் 2019-2020 ஆம் ஆண்டிற்கு 52 பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முன்னுரிமை அடிப்படையில் 36 பணிகள் எடுக்கப்பட்டுள்ளது. 127.88 கி.மீ தூரத்திற்கு ரூ.322.20 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழக செயல் இயக்குநரும், பொதுப்பணித்துறை தூர்வாரும் பணி கண்காணிப்பு அலுவலர் திரு.வி.விஷ்ணு,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (18.08.2019) ஆய்வு.

இலால்குடி வட்டம் தெற்கு மற்றும் வடக்கு அய்யன் வாய்க்கால் 4.5 கி.மீ தூரத்திற்கு ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரம் மூலம் தூர்வாரும் பணியும், மலட்டாறு வாய்க்கால், 3.30கி.மீ தூரத்திற்கும் ரூ.8இலட்சம் மதிப்பீட்டில், தூர்வாரும் பணியும், வாளாடி கிராமத்தில் கணபதி வாய்க்கால், அசக்காட்டு வாய்க்கால் 3கி.மீ தூரத்திற்கும், ஆலங்குடி வாய்க்கால் 3.கி.மீ தூரத்திற்கும், ரூ.5இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து இப்பணிகள் அனைத்தும், விரைந்து முடித்து விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய தண்ணீர் திறந்து விடுவதற்கு முன்பாக வருகின்ற (22.08.2019)குள் தூர்வாரும் பணிகளை முடிக்கவேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதனைத் தொடர்ந்து மாயனூரில் இருந்து பிரியும் புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி வரை 90கி.மீ தூரத்திற்கு வாய்க்கால் செல்கிறது. புதிய கட்டளை மேட்டுவாய்க்கால் நெய்தலூர் கிராமத்திலிருந்து ஸ்ரீரங்கம் வட்டம் தாயனூர் வரை 10கி.மீ தூரத்திற்கு ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் இயந்திரம் மூலம் தூர்வாரும் பணி நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு இப்பணிகள் அனைத்தும் இரவு, பகல் பாராமல் கூடுதல் இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணியை விரைவாகவும், தரமானதாகவும் இருக்க வேண்டும் என்று பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்புக் கோட்ட செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி பொறியாளர்கள் திரு.கோபிகிருஷ்ணன், திரு.ஜெயராமன், இலால்குடி உபக்கோட்ட உதவி செயற்பொறியாளர் திரு.கே.ஜெயராமன் ஆகியோர் உடன் இருந்தனர்.

**செய்தி வெளியீடு:**

18/8/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**